//

DEPOSITION OF THE WITNESS

IN THE COURT OF THE DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, RAMESWARAM

**Case No. CC.No.123/2021**

**prosecution witness: PW-9**

| | | | |
|---|---|---|---|
| Name | : | Caste | |
| Fathers Name | : | calling | |
| Village | : | Religion | |
| Taluk | : | Age | |

**Accused present.**

வாக்குமூலம்

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர், இராமேஸ்வரம்

வழக்கு எண்.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | மாயா ராஜலட்சுமி | ஜாதி | : | |
| க/பெ. | : | | தொழில் | : | |
| கிராமம் | : | | சமயம் | : | |
| தாலுகா | : | | வயது | : | |

<u>03.10.2024</u>

<u>முதல் விசாரணை:-</u>

1.நான் தற்போது தேனி மாவட்ட குற்றப்பிரிவில் காவல் ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 22.09.2019 ம் தேதி மண்டபம் காவல் நிலையத்தில் காவல் ஆய்வாளராக பணிபுரிந்த போது சார்பு ஆய்வாளர் சிராஜ்தீன் அவர்கள் பதிவு செய்த குற்ற எண். 154/2019, பிரிவுகள்.279, 337, 304(A) இதச வழக்கின் வழக்கு கோப்பை பார்வையிட்டேன். **முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.4** ஆகும். அன்றைய தினமே 13.30 மணிக்கு சம்பவ இடத்தில் சாட்சிகள் சதாசிவம், தர்மராஜ் ஆகியோர் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர், மாதிரி வரைபடம் தயார் செய்தேன். அந்த **பார்வை மகஜர் அ.சா.ஆ-5 ஆகும். மாதிரி வரைபடம் அ.சா.ஆ.6** ஆகும்.

2. சம்பவ சாட்சிகள் ஜெயமுருகன், முத்துமாரி, பிரபு, முனியசாமி, சுந்தரம், சதாசிவம், தர்மராஜ் ஆகியோர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். 22.09.2019 ம் தேதி 14.30 மணி முதல் 15.45 மணி வரை இராமநாதபுரம் அரசு மருத்துவமனை பிரேத வைப்பறையில் வைக்கப்பட்டிருந்த இறந்த நபர் சசிக்குமார் என்பவரின் பிரேதத்தை விசாரித்து பிரேத விசாரணை செய்தேன். அந்த**பிரேத விசாரணை அறிக்கை அ.சா.ஆ.7** ஆகும். மேலும் 636 மலைச்சாமி என்பவர் மூலம்

பிரேதத்தை பிரேத பரிசோதனைக்கு அனுப்பி வைத்தேன்.

3. பிரேதத்தை பரிசோதனை செய்த மருத்துவரை விசாரித்து வாக்குமூலம் பதிவுசெய்து பிரேத பரிசோதனை அறிக்கை பெற்றேன். **பிரேத பரிசோதனை அறிக்கை அ.சா.ஆ. 8** ஆகும்.

4. 22.09.2019ம் தேதி சுமார் 18.00 மணியளவில் மண்டபம் வலையர்வாடி பஸ்ஸ்டாப் அருகில் வைத்து இவ்வழக்கின் எதிரியை கைது செய்து நிலையம் கொண்டு வந்துநிலையப் பிணையில் விடுவித்தேன்.

5. 23.09.2019ம் தேதி இவ்வழக்கில் சம்பந்தப்பட்ட இருசக்கர வாகனமான TN 60 Q 5959 வாகனத்தையும், 03.10.2019ம் தேதி TN 65 Q 3682 என்ற இருசக்கர வாகனத்தையும் ஆய்வுக்காக இராமநாதபுரம் மோட்டார் வாகன ஆய்வாளரிடம் அனுப்பி வைத்து அறிக்கை பெற்றேன். அந்த **மோட்டார் வாகன ஆய்வறிக்கைகள் முறையே அ.சா.ஆ.9, 10** ஆகும்.

6. அதன்பின்பு காயம்பட்ட ஜெயமுருகன் என்பவருக்கு சிகிச்சையளித்த மருத்துவர் தினேஷ்முகில் என்பவரை விசாரித்து விபத்து பதிவேடு பெற்றேன். அந்த **விபத்து பதிவேடு அ.சா.ஆ.11** ஆகும்.

7. இறுதியாக எனது விசாரணையை முடித்து எதிரி மீது பிரிவுகள்.279, 337, 304(A) இதச படி குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன்.

<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:-</u>

1. பொதுவாக ஞாயிற்றுக்கிழமை கொத்தனார்களுக்கு விடுமுறை என்றால் அப்படி சொல்லமுடியாது. இந்த வழக்கின் சம்பவம் நடைபெற்றது ஞாயிற்றுக்கிழமை என்றால் சரிதான். ஞாயிற்றுக்கிழமை விடுமுறை என்பதால் இறந்த சசிக்குமாரும், புகார்தாரரும் கொத்தனார் வேலைக்காக சென்றார்கள் என்பது பொய் என்றால் சரியல்ல. வழக்கின் பட்டியல் சாட்சிகள் 1 முதல் 7 சாட்சிகள் புகார்தாரர் மற்றும் இறந்து போன நபரின் ஊரினைச் சார்ந்தவர்கள் என்றால் எல்லாம் கலந்துதான் உள்ளது. சேராந்தை என்ற கிராமம் சம்பவ இடத்தில் இருந்து சுமார் 70 கி.மீ துூரம் இருக்கும் என்றால் சரிதான். சம்பவ இடம் 70, 80 கிலோ மீட்டர் துூரம் என்பதால் சேராந்தை கிராமத்தைச் சேர்ந்தவர்கள் விபத்தினை நேரடியாக பார்க்கமுடியாது என்றால் சரிதான்.

2. சம்பவம் நடைபெற்றது மதுரை, இராமேஸ்வரம் தேசிய நெடுஞ்சாலை என்றால் சரிதான். தேசிய நெடுஞ்சாலை என்பதால் எப்போது போக்குவரத்து அதிகமாக இருக்கும் என்றால் சரிதான். சம்பவ இடத்தில் இருந்தவர்களையோ, அக்கம் பக்கத்தில் இருநதவர்களையோ இந்த வழகில் நான் சாட்சியாக சேர்க்கவில்லை என்றால் சரிதான். 304(A)வழக்குகளில் சம்பவ இடத்தில் இருந்தவர்களையும், அருகில் இருப்பவர்களையும் சாட்சியாக சேர்க்க வேண்டுமென்று பல உச்ச, உயர்நீதிமன்ற தீர்ப்புகளில் உள்ளது என்றால் சரிதான். அரசு தரப்பு வழக்கு

படி புகார்தாரரான அ.சா.1 ஜெயமுருகனுக்கு வலது கையில் காயம் என்றால் சரிதான். ஆனால் அ.சா.1 புகாரினை எழுத்து மூலமாக கொடுத்துள்ளார் என்றால் சரிதான். அ.சா.1 ஜெயமுருகனுக்கு வலது கையில் காயம் ஏற்பட்டு சிகிச்சையில் இருந்ததால் அவரால் புகாரினை எழுதியிருக்க முடியாது என்றால் சரிதான். அ.சா.1 ஆல் புகார் எழுத முடியாமல் இருந்தபோது அவரால் புகாரில் கையொப்பமும் போட்டிருக்க முடியாது என்றால் சரியல்ல. எனவே இந்த வழக்கின் புகார் என்னால் உற்பத்தி செய்யப்பட்டது என்றால் சரியல்ல. எனது விசாரணையில் புகாரை எழுதியது யார் என்று தெரிந்துகொண்டேனா என்றால் இல்லை தெரியவில்லை. அ.சா.1 க்கு வலது கையில் அடிபட்டு இருப்பதால் புகாரை அவர் சொல்லச் சொல்ல காவலர் தான் எழுதினார் என்றால் சரிதான். அப்படியென்றால் கொடுக்கப்பட்ட புகார் எழுத்து மூலமான புகார் இல்லை என்றால் எனக்கு தெரியாது. இந்த வழக்கில் புகார் 01.45 மணி நேரம் காலதாமதமாக கொடுக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

3. இந்த வழக்கில் புகாரில் புகார்தாரரும், இறந்து போன நபரும் இடது புறமாக இருசக்கர வாகனத்தில் சென்றதாக இல்லை என்றால் சரிதான். பொதுவாக தேசிய நெடுஞ்சாலையில் இருசக்கர வாகனத்தில் செல்லும்போது இடதுபுறமாக செல்லவேண்டும் என்பது விதி என்றால் சரிதான். எனது மாதிரி வரைபடத்தின் படி சம்பவ இடமானது தேசிய நெடுஞ்சாலையின் மையப்பகுதி என்றால் சரிதான். இந்த வழக்கில் தேசிய நெடுஞ்சாலையில் இடதுபுறமாக செல்லவேண்டிய இருசக்கர வாகனம் சாலையின் மையப்பகுதியில் சென்றதால் அவரது கவனக்குறைவினால் தான் இந்த வழக்கு விபத்து ஏற்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

4. இறந்து போன நபருக்கும்,புகார்தாரருக்கும் ஓட்டுநர் உரிமம், வண்டிக்கான இன்சூரன்ஸ் எதுவும் கிடையாது என்றால் சரிதான். சம்பவம் நடைபெற்ற இடத்தில் இருந்து 100 மீ தொலைவில் ராஜா கல்லூரி உள்ளது என்றால் 200 மீட்டர் தொலைவில் உள்ளது. சம்பவ இடத்தை தாண்டி ராஜா கல்லூரியின் அருகே ஒரு கிராமத்திற்கான பேருந்துநிறுத்தம் என்றால் சரிதான். தேசிய நெடுஞ்சாலையின் அருகில் பள்ளிகள், கல்லூரிகள், கோவில்கள் இருநதால் வேக்த்தடை இருக்கும் என்றால் சில இடங்களில் இருக்கும். இந்த வழக்கு சம்பவ இடத்திற்கு அருகே வேகத்தடை இருந்தது அதை நான் இந்த வழக்கிற்காக காட்டவில்லை என்றால் சரியல்ல. பொதுவாக வேகத்தடை இருக்கும் இடங்களில் வேகத்தடையை தாண்டி சென்று வேகமாக ஓட்ட முடியாது என்றால் சரிதான்.

5.பொதுவாக கொத்தனார் வேலைக்கு செல்பவர்கள் காலை 10.00 மணிக்கு சென்றுவிடுவார்கள் என்றால் நேரம் சொல்லமுடியாது. இந்த வழக்கின் சம்பவ நேரம் என்ன என்றால் காலை 10.45 மணி ஆகும். கொத்தானர் வேலைக்கு செல்பவர்கள் காலை 09.00 மணிக்கு எல்லாம் வேலை செய்யும் இடத்தில் இருகக வேண்டும், அதனால் இறந்துபோனவரும, புகார்தாரரும் கொத்தனார் வேலைக்கு செல்லவில்லை என்றாலும, வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால்சரியல்ல.

6.சம்பவம் நடைபெற்றபோது இருசக்கரவாகனத்திற்கு ஒரு அரசு பேருந்து இராமேஸ்வரம் நோக்கி சென்றது என்றால் அப்படி எதுவும் இல்லை. இருசக்கர வாகனத்தில் வந்தவர்கள் அந்த பேருந்தை முந்தி சென்று முறையாக ஓட்டி

வந்த எதிரியின் வாகனத்தின் மீது மோதிவிட்டார்கள் என்றால் சரியல்ல. இந்த வழக்கில் இருசக்கர வாகனமும், நான்கு சக்கர வாகனமும் ஒரே நாளில் மோட்டார் வாகன ஆய்வுக்கு அனுப்பவில்லை என்றால் சரிதான். ஒரு விபத்தில் இரு வாகனங்கள் விபத்து ஏற்படுமபோது இரண்டு வாகனங்களையும் ஒரே நாளில் மோட்டார் வாகன ஆய்வுக்கு அனுப்பினால்தான் எந்த வண்டிக்கு சேதாரம் ஏற்பட்டது என்றும், உண்மையில் சம்பவம் நடைபெற்றது என்று சொல்லமுடியும் என்றால் சரியல்ல. விபத்து ஏற்பட்டவுடன் வாகனங்களை மோட்டார் வாகன ஆய்வுக்கு அனுப்பவேண்டும் என்றால் சரிதான். இந்த வழக்கின் வாகனங்ள உடனே மோட்டர்ர் வாகன ஆய்வுக்கு அனுப்பவில்லை என்றால் சரிதான்.

7.எனது வரைபடத்தில் அக்கம், பக்கத்தில் குடியிருப்புகள் இருப்பதை காட்டவில்லை என்றால் சரிதான். சம்பவம் நடைபெற்றபோது இறந்து போன நபரின் ஊரில் திருவிழா அதனால் மதுபோதையில் தான் வண்டி ஓட்டி வந்தார்கள் என்றால் சரியல்ல. இறந்து போன நபரின் மனைவி அங்குள்ள Primary health center ல் நர்சாக பணிபுரிந்து வந்தார் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. நான் முறையாக வழக்கினை புலன் விசாரணை செய்யாததால் தான் இறந்து போனவரின் மனைவி எங்கு பணிபுரிகிறார் என்று எனக்கு தெரியவில்லை என்றால் சரியல்ல.

8.அ.சா.2 முத்துமாரி சாட்சியத்தில் சம்பவம் சம்பந்தமாக போலீஸ் PHC ல் வைத்துதான் விசாரித்தார்கள் என்று சொன்னது சரியா, தவறா என்றால் தவறாகும். அ.சா.2 முதல்விசாரணையில் அங்கு நடந்த விபத்திற்கு காரணம் எனது கணவரும், ஜெயமுருகனும் போதையில் இருந்தது தான் காரணம் என்று சொல்லியுள்ளதை நான் விசாரணையில் மறைத்துளளேன் என்றால் சரியல்ல. இந்த வழக்கின் சாட்சிகள் யாரையும் நான் விசாரிக்கவில்லை என்றால் சரியல்ல. நான் சம்பிராதயத்திற்காக இறந்து போன நபரின் ஊரில் உள்ளவர்களை சாட்சியாக விசாரிக்க முகவரி மட்டும் பெற்றுக்கொண்டு வழக்கினை நானே உற்பத்தி செய்துள்ளேன் என்றால் சரியல்ல. எதிரிக்கும், இந்த வழககிற்கும் எந்த சம்பந்தமுமு கிடையாது என்றால் சரியல்ல.

S ILAIYARAJA

Digitally signed by S ILAIYARAJA
Date: 2024.10.03 16:52:29 +0530